4 - MAY 1963

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௪	மலர்
	சுபகிருது, மாசி, பங்குனி.	
௩அ	1963 பிப்ரவரி, மார்ச், ஏப்ரல்.	௧௧, ௧௨

இராம குப்தன்

M. RAGHUPATHY, M. A.,

Curator Government Museum, Pudukkottai-2.

சரித்திரத்தின் மிக முக்கிய அம்சம், காலம் நிர்ணயித்தல். அரசனின் பெயரும், அவன் ஆண்ட காலமும் ஒன்ருக இணைவதோடல்லாமல், அவ்வரசனுக்கு முன் வந்தோரின் காலமும் பெயரும், பின் வந்தோரின் காலமும் பெயரும் ஒன்ருக அமைந்தால் தான் அவ்வரசன் சரித்திரத்தில் அனேகமாக சேர்க்கப்படுகிருன். மேலும், பல ஆதாரங்கள் அவ்வரசனுக்கு உறுதுணை நிற்குமேயாகில், அவனின் இடம் வரலாற்றில் அசைக்க முடியாததாக ஆகிவிடுகிறது. இவ்வாதாரங்கள் கல்வெட்டுக்களின் மூலமாகவும், செப்புத்தகடுகளின் மூலமாகவும், நாணயங்களின் மூலமாகவும், சுவடிகள் மூலமாகவும், அன்னியநாட்டு யாத்திரிகர்களின் குறிப்புக்கள் மூலமாகவும், பழக்கத்தில் வழங்கிவரும் கதைகள், கவிதைகள் மூலமாகவும் கிடைக்கின்றன.

இந்தியாவின் சரித்திரம் அல்லது வரலாற்றுக் காலம் சுமார் கி. மு. 600 முதல்தான் ஆரம்பமாகிறது. கி. மு. 600க்கு முன்பு வரலாறு இல்லையென்று இதற்கு பொருளில்லை. இந்தியாவின் வரலாற்றைப் பாதுகாத்து வைக்கும் பழக்கம் கைக்கொள்ளப்படவில்லை என்றே பொருள். ஆகவே கி. மு. 600க்கு முன்புள்ள வரலாற்றை வரையறுத்துக்கூற இயலவில்லை.

கி. மு. 600க்குப் பின்பு ஆண்ட சில அரசர்களின் வரலாற்றுக் காலத்திலும் சந்தேகங்கள் எழுகின்றன. காரணம், ஒரே அரசன் பல பெயர்களால் அழைக்கப்பட்டமையாலும், மூத்தவன் இருக்க இளையவன் அரசன் ஆனதாலும், சிலர் மிக மிகச் சொற்ப காலம் அரசாட்சி நடத்தியதாலும், கதைகளின் மூலமே அரசனை அறிய வேண்டியிருப்பதாலும் ஆகும்

இத்தகைய ஓர் நிகழ்ச்சியைக் குப்தர் காலத்தில் காண முடிகிறது. அந்நிகழ்ச்சியை இனி பார்ப்போம்.

இந்தியாவில் சீரும் சிறப்புடனும் செங்கோல் செலுத்திய வம்சங்களில் குப்த வம்சமும் ஒன்ருகும். அக்குப்த வம்ச அரசர்களில் சிறந்தவரெனக் கருதப்படுபவர் சமுத்திர குப்தர் ஆவார். இவரின் காலம் கி. பி. 330 முதல் 375 ஆகும். இவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர் மட்டுமன்றிப், போர் முரசை வெற்றி முரசாக ஒலிக்கச் செய்யும் போர்வீரர். அஞ்சா நெஞ்சினர். அன்னியப் படைகள் அணிஅணியாக அடுத் தடுத்துப் படையெடுத்தாலும், உருக்குலையா உள்ளத்தோடும், அஞ்சா நெஞ்சத்தோடும் போர் புரியும் ஆற்றல் படைத்தவர். நூறு போர்ப் புண்களை நெஞ்சில் புகழ்க் கண்களாகக் கொண் டவர். இந்திய நெபோலியன் என்று சரித்திர ஆசிரியர்களால் அழைக்கப்படுபவர். தனக்கு நிகர் தானே என்பதை அறிவிக் கும் அசுவமேதயாகம் நடத்தி, அம்முக்கிய நிகழ்ச்சியை என்றென்றும் நிலைநிறுத்த நாணயங்களில் பொறித்தவர். இவ்வகைகளில் பிரசித்திப்பெற்ற அரசரை அடுத்து வந்தது இரண்டாம் சந்திர குப்தரா அல்லது இராம குப்தரா என்ற வினு பல அறிஞர்களை ஆராய்ச்சியாளர்களாக்கியது. சாதாரணமாக, சமுந்திர குப்தருக்குப்பின் அரசாண்டது இரண்டாம் சந்திர குப்தர் என்பதாகும். ஆனல் விசாகதத்தர் எழுதிய 'தேவி சந்திர குப்தம்' என்னும் காணுமல் கிடைத்த நாடகம் இராம குப்தர் என்னும் அரசர் சமுந்திர குப்தரைத் தொடர்ந்து செங்கோல் செலுத்தினர் என்பதைத் தெளிவு படுத்தியது.

இனி விசாகதத்தரின் தேவிசந்திரகுப்தத்திலுள்ள நாடகச் சுருக்கத்தைக் காண்போம்.

சமுந்திர குப்தரின் மூத்தமகன் இராம குப்தன். இவன் தன் தந்தையைப்போல் வீர பராக்கிரமத்திலும் கல்வி கேள்வி களிலும் சிறந்தவன் அல்லன். புலிக்குப் பிறந்து பூனையாகவும், வீரனுக்குப் பிறந்து கோழையாகவும் இருந்தான். இவன் புலித்தோல் போர்த்திய பசு; அஸ்திவாரம் இல்லாக் கட்டிடம் என்பதை அறிந்துக் கொண்டான் மதுராவின் சாக வம்சத்து அரசன். புகழ் ஏணியில் வாழும் குப்த பேரரசைப் புழுதியில் தள்ளப் புறப்பட்டான். குப்த பேரரசைக் கைப்பற்றுவதோடு இராம குப்தரின் அரசியான (மனைவியான) துருவா தேவி யையும் கைப்பிடிக்கக் கருத்துக் கொண்டான். ஆகவே இராம குப்தனுக்கு ஓலை போக்கினன். தூதுவன் மூலம், இராணி துருவா தேவியைத் தன் அந்தப்புரத்திற்கு அனுப்பிவிடும்படி யும் இல்லையேல், அடுத்த விநாடியே மதுராவின்படை குப்த சாம்ராஜ்யத்தின் மீது பீடுநடைபோடுமென்று அறிவித்தான். பலத்த படையும் உயர்ந்த பண்பும் இல்லாமல், பதவிப்

பேராசை மட்டுமே கொண்ட இராம குப்தன், சாக அரசனின் கட்டளைக்கு அடிப்பணிந்தான். ஆனால் அரசி துருவா தேவியோ அகிலம் புகழும் ஆரணங்கு. அம்பெண்மலர் இவ் வன்செய்தியை அறிந்ததும் அலறினாள். பதறினாள், புழுபபோல் துடிதுடித்தாள். மானம் அழிந்து பூவுலகில் பூதவுடலுடன் வாழ்வதைவிட போரிலே உயிரிழந்து விண்ணு லகில் புகழுடலுடன் வாழலாமென எடுத்துரைத்தாள் தன் வாழ்க்கைத் துணைவரிடம். ஆனால் 'என் வாழ்க்கைக்குத் துணை இவ்வரசு, அரசியல்ல' எனக்கூறி சாக மன்னனின் ஆணைப்படி அவ்வரசனின் அந்தப்புரத்திற்கு அரசியை அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டான்.

இச்செய்தி கேட்டான் சமுந்திர குப்தனின் இளைய மகனும், இராம குப்தனின் இளை சகோதரனுமான இரண்டாம் சந்திர குப்தன். அவன் உள்ளம் கோபத்தால் கொதித்தது. எண்ணம் எரிமலையாகியது. குப்த பேரரசின் புகழை கலைக்கத் துணிந்த சாக அரசனையும், இராம குப்தனையும் கொன்று குவிப்பேன்' எனச் சூளுரைத்தான் இரண்டாம் சந்திர குப்தன். உடனே செயலாற்றவும் தொடங்கினான்.

இரண்டாம் சந்திர குப்தனுக்குத் துணையாக நின்றது ஆடை ஆபரணங்கள். இவற்றின் உதவியால் உருவத்தில் துருவாதேவியாக மாறினான். அரசியின் உருவில் சாக அரசனின் அந்தப்புரத்திற்குள் சென்றான் இரண்டாம் சந்திர குப்தன். குப்த பேரரசின் புகழை அணைத்து விட்டோமென்ற செருக்குடனும், அரசியின் மீதுள்ள தாங்க முடியா தாபத்தோடும் அவளை அணைத்துக்கொள்ள வந்த சாக அரசன், மாறுருவில் இருந்த இரண்டாம் சந்திர குப்தனின் கையால் சாவை அணைத்துக் கொண்டான். பண்பைக் காட்டிலும் பதவியே பெரிதெனக் கொண்ட இராம குப்தனும் சாக அரிசனின் முடிவையே பின்பற்றினான். இரண்டாம் சந்திர குப்தன், குப்த பேரரசின் புகழைக் காப்பாற்றியதோடு அதன் அரசனாகவும், துருவா தேவியின் மானத்தைக் காப்பாற்றியதோடு அவளைத் தன் வாழ்க்கைத் துணைவியாக வும் ஏற்றுக் கொண்டு அரச வாழ்விலும், அரசி வாழ்விலும் விளக்கேற்றி வைத்தான்.

ஆகவே குப்த சாம்ராஜ்யத்தின் புகழையும் மானத்தையும் காத்தவீரன் இரண்டாம் சந்திரகுப்தன் என்றால் அது மிகையாகாது. குப்தர்களின் வரலாற்றில் இவன் பெயர் பொன்னால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

மேற்கண்ட வரலாற்று நிகழ்ச்சிக்குச் சான்று பகருபவை:

1. பாணரின் ஹர்ஷ சரிதம்.
2. மஜ்மல்—உத்—தவாரிக்.
3. சாஞ்சன் செப்புத் தகடுகள்.

வாழ்வு—இலக்கியம்

தி. நா. அறிவு ஒளி

அலைந்து கொண்டிருக்கும் மாந்தர் உணர்வை ஒருவழிப் படுத்தி—ஒருமுகப்படுத்தி—உயர்ந்த வழியில் செலுத்தி, விழுமிய நிலையை எய்தத் தூண்டி வழிகாட்டி வளர்க்கும் படைப்புக்களைச் சீரிய கலையாக—இலக்கியமாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்வதே அறிஞர் இயல்பு.

கலையும் இலக்கியமும் மாந்தர்க்குக் கைகட்டிப் பணி செய்து, பயன் விளைவிப்பதற்காக அறிவின் முயற்சியால், உணர்வின் ஆக்கத்தால் உருவாவனவாம்.

பயன் நல்க வியலாத நிலையில் வாழ்க்கைக்குப் புறம்பாகக் கலையையும், இலக்கியத்தையும் கடத்தி நிறுத்துவது முறையற்றது மட்டுமல்ல; உலக இயல்புக்கு, இயற்கை யறத்துக்கு முரணானதுமாகும்.

வாழ்வின் தாழ்மையிலிருந்து வாழ்க்கையை விடுதலை செய்ய வேண்டிய கடமை புலமைக்கும் கலைக்கும் உரிய தலையாய உரிமையையும், இன்றியமையாத வேண்டுகையும் ஆகும். அவ்வுரிமை சிதைந்தால் கலை ஏது? இலக்கியம் ஏது?

மாந்தரின் உள்ளம் உலகியலை விட்டு, விடுபடாது சிறைப் பட்டுக் கிடப்பதாம். ஆயின், புலவோரின் உள்ளம் உலகியலை ஆழ்ந்தாய்ந்து அறிந்து தெளிந்து, அதனினும் மேம்பட்டு நின்று ஒளிர்வது. உலகியலைத் துறந்து உலகில் மாந்தர் எவ்வாறு வாழ்தல் கூடும்? உலகியலை உணர்ந்தொழுகி வாழ் பவன், உள்ளத்தால் உயர்ந்து சிறக்க முற்பட வேண்டும். அம்முயற்சியை இடையறாது செய்து சிறப்போரே புலவராய், மாமனிதராய்ப் பெருமை பெறுகின்றனர்.

ஓர் அறிஞரின் படைப்பினும் அவர் வாழ்க்கை முயற்சியே சிறப்பாக எண்ணிப் பார்த்தற்குரிய பண்பார் இயல்பினதாம்.

இராம குப்தன் கி. பி. 375ல் மிகக் குறைந்த காலம் அரசாண்டான் என்பதாலும், பெருமை பெற்ற பேரரசை சிறுமைபடுத்த துணிந்தமையாலும், சிங்கத்தின் குகையில் சுண்டெலிபோல் இருந்ததாலும், குப்த வரலாற்று ஏட்டை இவன் பெயர் கொண்டு கறைப்படுத்த விரும்பாததாலும் அவனைத் தொடர்ந்து ஆண்ட பேரரசரான இரண்டாம் சந்திர குப்த விக்கிரமாதித்தர், இராம குப்தரின் பெயரை வரலாற்றில் இணைக்கவில்லை போலும். ஆயினும் மேற்கூறிய சான்றுகள் இராம குப்தன் சிறிது காலம் அரசாண்டான் என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது. வரலாற்று உண்மைகளை அறவே மறைக்க நினைப்பதும் முனைவதும் வரலாறு உள்ளளவும் இயலாது என்பது இதனால் தெளிவு.

படைப்பின் பெருமைக்கும், படைப்பின் அருமைக்கும் நிலைக் களம் அறிஞரின் வாழ்க்கையே யன்றோ?

அறிஞரின் வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியும் அவர்க்கு உதவிசெய்து, உயர்த்த உதவும் துணைக் கருவிகளாம். தாம் வாழும் காலத்தினை முழுதும் நிறையறிவால் தெளிந்து, வருங் காலத்தினையும் அளந்துணர்ந்திட முயன்று சிறப்பவர் புலவர் பெருமக்களே. தன் வாழ்வடைவுகளைக் கொண்டு, பிறர் வாழ்வடைவுகளையும் அளக்கின்றார். இவ்விரு அடைவுகளின் அடிட்படையில் உலகினரின் வாழ்வடைவுகளை வகுத்துணர்ந்து வழிகாட்ட முற்படுகின்றனர் சான்றோர்.

புலவர் 'கருத்துக்கள் இயல்பு' இன்னதென்று உணர் வதற்கு அன்னார் வாழ்வு ஓர் அளவு கருவி; அன்னார் படைப்புக் களே அளவுகோல். படைப்பு வாயிலாகப் புலவோரின் வாழ் வையும் அளக்கலாம். ஆராயலாம்; சான்றோர் தம் வாழ்க்கையை ஆராய்ந்து அவர் தம் படைப்பை அறியலாம்.

அகஉலகம் அரிய உலகம். அதன் தொழிற்பாடும், முயற்சி களும் கட்புலனுக்கு எட்டாத நுண்மையது; எளிய மக்களால் உணர்தற்கியுலாதன. உய்த்துணர்வாலும் கற்பனையாலும் உணரவியலா ஒட்ப நுட்டமும் விழுப்பமும் சான்றன. அக உலக வாழ்க்கையிற்றிளைத்து வாழ்ந்து இன்புற்றார்க்கு அன்றிப் பிறர், அதன் அருமை பெருமையும், ஆற்றல்—பயனையும் அறிவது கடினமே. என்னே வளமை சான்றது புலமை உழவு!

'அகத்தின் அழகே அழகு' என்பது அறிஞர்தம் உறுதிக் கொள்கை. (No beauty is like the beauty of the mind-cocke) 'கல் வியழகே யழகு' எனத் தமிழ்ப் புலவர் கூறிய கூற்று எண்ணுதற்குரியதாம். அதனால்தான் கலைஞர்—புலவர் ஆகியோர் உள்ளத்திற்கு நனி முதலிடம் நல்குவர். சான்றோ ரின் வாழ்வே ஓங்கிய குரலில் அறிவுரை நல்கவல்லதாம். (Actions speak than words-Proverb)

இதனால்தான் அறிஞர் எமர்சன் 'நம் நனிசிறந்த வரலாறு கவிதையாக உளது' (Our best History is still poetry) எனக் கூறினார். ஒழுங்கும் அழகும் கனிந்து பொலியும் வாழ்வே ஓர் அரிய கவிதைதான்!

நாடகங்களின் இலக்கணங்களை மட்டும் நன்கு படித்து விட்டு நாடகம் எழுதினால்; எப்படி அந்நாடகம், நாடகமாகா மல் பாழாகி விடுமோ, அதுபோலவே பல செயல்களைக் கற்றுக் கொண்டு . மட்டும் செய்ய முற்படின் பயனின்றிப் போகும். இலக்கணம் கற்றுவிட்டால் மட்டும் இலக்கியம் ஆக்கிவிட முடியாது!

வாழ்வு ஒரு தனிக்கலை! வாழ்வு ஒரு தனிக் கற்பனைப் படைப்பு! வாழ்வு அழகின்பம் செழித்தகலை நயம் பொதிந்த

எழிலிசை கெழுமிய உயிர் நிலவும் ஒளிமிளிர் ஓவிய இலக்கியம்!

வாழ முடிந்து விட்டதென்றால்; அவன் வென்றவன்!

வாழ்ந்தவன் வாழ்ந்த வாழ்வுக்கு இலக்கணம் வகுக்க முடியாது.

வாழாதவன் வேண்டுமானால் 'இப்படி வாழ்ந்திருந்தால் நன்றாக இருந்திருக்கக் கூடும்; அப்படி வாழ்ந்திருந்தால் அருமையாக இருந்திருக்கும்' எனவெல்லாம் கற்பனை செய்து 'வாழ்விலக்கணம்' வகுக்க முயலலாம். ஆனால், இக்கற்பனையெல்லாம் முறையாக வாழ்வதற்கு ஈடாகாது.

'கண்மூடி வாழ்க்கை,' 'விழிப்புள்ள வாழ்க்கை,' 'விழிப்புள்ள குருட்டு வாழ்க்கை' என மூவகை வாழ்க்கை நிலங்களை உலகில் காணலாம்.

அறிஞர்கள் 'நடுநிலை வாழ்க்கையையே' உயர்ந்ததெனக் கருதிப் போற்றி ஒழுகுவர். மக்களில் பெரும்பான்மையினர் முதல் வாழ்க்கை நிலையில் உள்ளனர். அதற்கடுத்த பெரும்பாலோர் மூன்றும் வாழ்க்கை நிலையில் கிடக்கின்றனர். இவ்விரு சாரார்க்கும் அவ்வளவாக இன்னலில்லை. ஆனால், 'விழிப்புள்ள வாழ்க்கையினர் வாழ்விலேதான் போராட்டம். மிகுதி; துன்பம் மிகுதி. இந்த இன்னலும் இகலும் நிறைந்த வாழ்வையே ஆன்றோர் தமக்குரியதாகத் தேர்ந்தெடுக்கின்றனர்! ஆம். உலகம் உய்ய வேண்டுமென்ற அருளுணர்வோடு—தொண்டுப் பண்போடு தங்களையே இழக்கக் கூடிய தனி உயர் வாழ்வுக்கு ஆட்படுகின்றனர் ஆன்ற பெருமை சான்ற அறிஞர்கள்!

இவர்களை ஏனைய எளிய மக்கள் உண்மை உணராமல் எள்ளிச் சிரிக்கின்றனர். 'வாழ்வை வீணாக்கிக் கொண்டனர்' என இரக்கப்படுகின்றனர். இதுவன்றோ பெருவியப்பு! 'இரக்கத்திற்குரியவர்கள் இரக்கப்படுகிறார்கள்! என்னே இரங்கத்தக்க நிலை!

குற்றமற்ற சாக்ரடீசு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் பட்டார். அறமுரைத்த இயேசு குற்றக் கூண்டில் பிணைக்கப் பட்டார்! தகவிலார் குற்றஞ் சாட்டினார்கள்; தக்கோர் குற்றஞ் சுமந்தவர்கள் போலத் தோன்றினார்கள்!? குற்றங்களின் கொள் கலங்களாக விளங்கியவர்களின் கைகளிலே சட்டமும் ஆற்றலும் சிக்கித் துடித்தன. அறம் தலைகவிழ்ந்தது; அமைதியாகக் கண்ணீர் பொழிந்தது.

ஆனால், யார் உண்மையில் குற்றவாளிகள்?

அறத்தின் காவலர்கள் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டவர்களாக விளங்கும் மாண்போவியம் தானே இவ்வரலாற்றால் புலனாகிறது?

ஆம். உண்மை வாழ்வை உணர்த்துவது நிகழ்காலமல்ல; வருங்காலமே என்ற உண்மையை உணர வேண்டும்.

இவ்வாறெல்லாம் தெளிந்துணர்ந்த புலமை உள்ளம் சான்ருண்மை நிலைக்கு உயர்கிறது. அந்நிலையில் உலகிற்கு உதவ, 'அருள் மழை' பொழிகிறது. அம்மழையே கலைமழை —புலமை மழை—பண்பு மழை—அன்பு மழை! ஆம். உலகை வாழ்விக்கும் இன்பமழையே அது!

சிறுமைக்கேங்கிச் சீர்கெட்டு வாழ்ந்தொழியும் சிறியோர் மலிந்த உலகில் பெருமைக்கேங்கிப் பேருணர்வோடு ஓங்கி வளர்ந்து, புல்லிய உலகத்தால் புரிந்து கொள்ள முடியாதபடி ஒடுங்கி வாழ்வதே நனிநாகரிகப் பண்பு வாழ்க்கையாம்.

ஒரு மூட்டைப் புல்லை வெட்டுவது வெற்றி வினையா? ஒரு பொற்காசுக்குரிய பொன்னை வெட்டி எடுப்பது அருவினையா?

அளவைக் கொண்டு — ஆரவாரத்தைக் கொண்டு— போலித் தோற்றத்தைக் கொண்டு உலகம் எதையும் மதிப்பிடக்கூடும். ஆயின், அறிஞர்கள் அவ்வாறு ஏமாற மாட்டார்கள்!

அறிஞர்கள் அளவைவிட, அருமை பெருமையையும் ஆரவாரத்தைவிட ஆற்றல், மதிப்பையும், உருவைவிட உயர்வு சீர்மையையும் கணக்கிட்டே எதனையும் போற்றுவர்!

எண்ணங்களால் உயர்ந்து விளங்க எல்லாராலும் இயலாதுதான். ஆம். ஆற்றலுள் ஆற்றல் அமைந்த நிலையே அது. அத்திறன் பெற்றோர் பிற எத்துறையில் தாழ்ந்திருப் பினும் அஃதொரு தாழ்வன்று.

உலக வாழ்வில் புலமை உள்ளம் பெறும் உண்மை அடைவுகள் அழியா நிலைபேறு பெறுகின்றன. அந்த அறிவ டை-வின் உருவமே கலை—இலக்கியச் செல்வங்கள். அந்தப் பண்படைவின் ஓவியமே வரலாற்று நாகரிகச் செல்வங்கள்!

உணர்வால் விளைந்து, உணர்வால் வளர்ந்து, உணர்வால் சிறந்து, உணர்வால் உணரப்படும் 'நுண் வாழ்வோவியம்' சான்ரோரின் 'படைப்பு வாழ்க்கை'.

அத்தகு வாழ்வோவியம் பண்பை உணரும் உலகினர் அம்முயற்சியில் தலைப்படின் அவ்வெழில் சான்ற மேதகு வாழ்வில் ஈடுபடமுடியும்.

அதனால்தான் நெஞ்சை உயர்த்தி நினைவை மலர்த்தும் சங்கத் தொகைச் செந்தமிழும், வள்ளுவனின் தெள்ளமிழ்தத் திருவிருந்தும் வாழ்விலக்கியம் என்கிறோம். அவை, வாழ் விலக்கியங்கள் மட்டுமா? அன்று, இலக்கிய வாழ்வும் ஆம்.

சரபோசி செய்த பெருவேள்வி

(கல்வெட்டு)

வித்துவான் சி. கோவிந்தராசன்,

[விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.]

தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னருள் தலை சிறந்தவர் சத்ரபதி சரபோசி மன்னரேயாவர். இவர், கி. பி. 1798 முதல், 1832 வரையில் அரசாண்டார். இப்பெருந்தகையின் காலத்தில் தஞ்சை மாவட்டம் அடைந்த சிறப்பினை இன்றும் ஆங்காங்குக் காணலாம். இம்மன்னர் ஆங்கிலேயரோடு மிகநெருங்கிய நட்புரிமை கொண்டிருந்தார். இவர் ஆங்கில மொழியில் நிறைந்த அறிவு பெற்றமைக்கு, ஆசிரியராக இருந்தவரும், கிழக்கிந்தியக் கம்பெனியாரின் வரலாற்றில் இடம் பெற்றவரும், புகழ் பெற்றவருமாய சுவார்ட்ஸ் பாதிரியாரே காரணம் ஆவர். இவ்வேந்தர் இரண்டு கையிலும் வாளெடுத்துப் போர்புரியும் ஆற்றல் பெற்றவராம். ஆங்கிலேயர் நெப்போலியனை வென்று கொண்ட வெற்றிக்கு அறிகுறியாகவும், தமது நட்பிற்குச் சின்னமாகவும் இவர் தஞ்சை மாவட்டத்தின் தென்பாலுள்ள சாளுவ நாயக்கன் பட்டினத்தில், அரண்வகைக் கட்டிடக் கலைக்கோர் எடுத்துக் காட்டான மனோராவை எழுப்பியுள்ளார். இவர், தஞ்சை அரண்மனையில் செப்பமுறச் சேமித்து வைத்துள்ள சரசுவதி மகால் என்னும் பெரிய சுவடி நிலையம் என்றும் நின்று இம் மன்னரின் புகழை வளர்ப்பதாகும். இம்மன்னர், பல்வகை மொழிகட்கும் ஆக்கந்தந்ததோடு சிறப்பாகத் தமிழ் மருத்துவத் துறையில் பெரிதும் ஊக்கம் காட்டியுள்ளாரென்பதை, இவரது காலத்திலேயே வெளிவந்துள்ள 'சரபோஜி வைத்திய முறை' என்னும் தமிழ் மருத்துவ நூல்களால் அறியமுடிகிறது.

இத்தகைய மாண்பும் கல்வியறிவும் பெற்ற இப்பெருந்தகை, தஞ்சைக்குத் தெற்கே பதினைன்கு கல் தொலைவிலுள்ள முக்தாம்பாள் சத்திரம் என்னும் அறச்சாலையால் பெயர் பெற்றதும், ஒரத்தநாடு என்று அழைக்கப் படுவதுமாய சிற்றூரில், வேதம் வல்ல அந்தணர்களைக் கொண்டு, சோம யாகத்தின் ஒரு பகுதியைச் செய்திருக்கிறார் என்பதை ஆங்குள்ள வடமொழிச் சாசனமொன்று கூறுகிறது.

ஒரத்த நாட்டிலுள்ள முக்தாம்பாள் சத்திரத்தின் முகப்பு நாயக்கர் காலச் சிற்ப வேலைப்பாட்டிற்கோர் எடுத்துக் காட்டாகும். இவ்வூரில் பிற்பட்ட காலத்துக்குரிய வரலாற்றுச் சின்னங்கள் கிடைக்கக் கூடுமென்ற நோக்குடன் யான் இரு முறை சென்று, ஊரின் பல பகுதிகளையும் துருவிவரலானேன். அப்பொழுது, முக்தாம்பாள் சத்திரத்திற்கு எதிரேயுள்ளதும், படிக்கட்டுக்குளம் என்று அழைக்கப்படுவதுமான குளத்தின் மேலைக்கரையிலுள்ள சீர்கெட்ட மண்டபத்தின் தென்புறமாக, உள்ளத்தைக் கவரும் அமைப்பில் ஒரு சின்னத்தைக் கல் வெட்டுடன் கண்டேன். தரையிலிருந்து மூன்றடி உயர அளவில், பெரிய வடிவில், இறக்கைகளை விரித்துள்ள பாங் குடன் கருடப்பறவையின் உருவம் சுதை வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வடிவத்தின் நடுவே ஒரு கல் நிறுத்தப்பட்டு அதில் வடமொழியில் எழுத்துக்கள் வெட்டப் பட்டிருந்தன. கல்லில் உள்ளவாறு எழுத்துக்களைப் படியெடுத்துக்கொண்டு, பின்னர் மொழி பெயர்த்தறிந்த போது, அக்கருடவுருவம் சரபோசி செய்த வேள்விக்குரிய யாககுண்டம் என்பது விலங்கலாயிற்று.

கல்வெட்டில், 'சாலிய வாகன ஆண்டு 1731–ல் (கி. பி.– 1809–ல்) சுக்ல ஆண்டு தைத்திங்கள் 14–ம் நாள் திங்கட் கிழமை முதல் மாசித் திங்கள் வளர்பிறை 14-ம் நாள் திங்கட் கிழமை முடிய, ஒரு திங்களளவில் வேள்வி சரபோசி மன்னரின் விருப்பப்படி நடந்துள்ளது. சாமவேதம் வல்ல அப்பாசுவாமி தீட்சிதர் சோமயாகத்தின் ஒரு பகுதியான அக்னிஷ்டோம யாகத்தை முறைப்படி தொடக்கமாகச் செய்துவிட்டு, இருக்குவேதம் வல்ல சுப்பிரமணிய தீட்சிதரை வேள்வி நடத்தப்படவேண்டிய இடத்தில் கற்கள் கொண்டு வந்து கருடவடிவில் வேள்விக் குண்டம் செய்து எஞ்சிய அதிராத்ர யாகத்தை முறையாக எரியோம்பிக் குறைவின்றிச் செய்வித்தார்கள், என்னும் கருத்து காணப்படுகிறது.

வேள்விகளுள் மிகச் சிறந்தது சோம வேள்வி யென்று மறையோர் நவில்கின்றனர். அப்பெரு வேள்வி, அக்கினிஷ் டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, வாஜபே யம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்னும் ஏழு பிரிவுடன் கூடி முடிவதாகும். இவற்றுள் இரண்டு திறங்களை மேற்

கொண்டதாகவே சரபோஜி மன்னர் செய்த சோமவேள்வி ஒரு திங்களளவில் நிகழ்ந்திருக்கிறது. யாக குண்டத்திற்கு வேதம் விதித்துள்ள வடிவங்களுள் கருட வடிவமே சிறந்த தாகுமென்பர். அதனையே கல்வெட்டில் ச்சயன பூர்வம் என்னும் சொல்லால் அறிய முடிகிறது. அத்வரம் என்பது வேள்வி என்னும் பொருளுடையது. அத்வரி என்பது வேள்வி யாசிரியனாகும். வேள்வியாசிரியர்கள் இருக்குவேதி, சாம வேதி என்று குறிக்கப்படினும் இருவரும் ஒரே தகுதி பெற்றவ ரென்று தெரிகிறது. இருக்கு இசையுடன் இசைக்கப்படுங் கால் சாமமாகிற தென்பதை, 'ரிக்கேவ கீதியுக்தா சாமப் பவதி' என்னும் மறையின் தொடரால் மறையோர் அறிவிக் கின்றனர்.

கல்வெட்டு

(மொழிபெயர்ப்பு)

ஸ்ரீ சரபோசி மகாராஜா இந்தயிடத்தில் அப்பாஸ்வாமி அத்வரி என்பவரை சோமயாகத்தையும், சுப்பிரமணிய அத்வரி என்பவரை அதிராத்ரத்தைச் சயன பூர்வத்துடனும் செய்யும்படி உதவி புரிந்தார்கள்.

ஸ்வஸ்திஸ்ரீ : சாலிய வாகஹ சகாப்தம் 1731-ல், சுக்ல வருஷம் மகா மாதம் 14 உ திங்கட்கிழமை முதல் பால்குண மாதம் சுக்கில பக்ஷம் 14 உ திங்கட்கிழமை முடிய, ஸ்ரீமான் க்ஷத்ரபதி ராஜஸ்ரீ சரபோசி மகாராஜா அவர்கள், முக்தாம் பாள் புரம் கிராமத்தில் ஒரு யாகசாலைக் கட்டடம் கட்டும்படி செய்தார்கள். ஷ இடத்துக்கு சாமவேதி அப்பபாஸ்வாமி தீக்ஷிதர் வந்து அக்னிஷ்டோம யாகத்தை அதன பூர்வத் துடன் அவருடைய யாக சாலையில் செய்துவிட்டு, ரிக்வேதி சுப்பிரமண்ய தீக்ஷிதரை முக்கியமான யாகம் நடத்தப்பட வேண்டிய இடத்தில் கற்கள் சேகரித்து ஒரு கட்டடம் கட்டிக் கொண்டு பிரிதிபாதி அதிராத்ர யாகத்தை அதன பூர்வத் துடனும ச்சயன பூர்வத்துடனும் செய்யும்படி செய்வித் தார்கள். ஷ யாகம் மேற்கண்ட விதமாக இங்கு நடந் தேறியது.

'பாலையும் பட்டினமும்'

புலவர் மு. சுந்தரேசன் காவித்தண்டலம்

தமிழ் இலக்கியங்களில் பொருள் வயிற் பிரிவு பற்றிய பாடல்கள் பல உண்டு. அக்கால இளைஞர்கள் தம் அன்புக் காதலியரையும் பிரிந்து வெளிநாடு சென்று பொருளீட்டிக் கொணர்ந்த செய்தி பற்றி விளக்கும் துறைகள் அவை! வளமான வாழ்வைப் படைத்தவர் என்றாலும்—குறையாச் செல்வம் நிறைந்த வாழ்க்கையைப் பெற்றிருந்தாலும் வெளி நாடு சென்று பொருளீட்டிக் கொணர்வதும், ஈட்டிய பொருளைக் கொண்டு தம்மைச் சூழ்ந்து வாழ்கின்ற சுற்றத்தைப் போற்றுவதுமே கடமையென அன்றைய இளைஞரெலாம் கருதினர். வறியோரையும், முதியோரையும், எளியோரையும் காப்பது தம் கடமையெனப் போற்றி இளைஞர் சமுதாயம் மேற்கொண்ட சிறந்த தொண்டினை உணர்த்தும் செய்தியை விளக்குவன அத்துறைகள்,

காதலுக்கும் கடமைக்கும் இடையே எழும்பிய மனப் போராட்டங்களையெலாம் வென்று கடமை ஒன்றைக் கருதியே அக்கால இளைஞர்கள் தம் அருமைக் காதலியரையும் விட்டுப் பிரிந்தனர். பிரியும்போது எழும் மனப்போராட்டங்களைச் 'செலவழுங்குதல்' என்ற துறையாக அக்காலப் புலவர்கள் பாடிவைத்தனர்.

அத்தகைய நிலையில் காதலியை விட்டுப் பொருளீட்டி வரச் சென்றான் ஒரு தலைவன். அழகும் இளமையும் மிக்க மனைவி; சிறந்த செல்வமும் உண்டு; முன்னோர் தேடிவைத்ததைச் செலவழித்தல் ஆணுக்கு ஆண்மையாகுமா? எனவே பொருளீட்டிவரச் செல்ல நினைத்தான் அவன். தலைவியைப் பிரிய எண்ணினான்; அவளோடு துய்த்த இன்பமும் அவள் தோள் நலனும் அவனை நினைவு கூரச் செய்தன; எனினும் பொருளீட்டிக் கொணர்தல் தன் கடமையல்லவா?

தான் வெளிநாடு சென்று பொருளீட்டி வருவதால் பெறும் பயனையும் எண்ணியது அவன் மனம்; யாரைப் பிரிந்து செல்கின்றானோ அவளுடன் இருப்பதால் அடையும் பயனையும் எண்ணியது அவன் மனம்! இரண்டுக்கும் இடையே போராட்டம்! இரண்டுக்கும் நடந்த போராட்டத்தை அழகுபடப் பாடலாக்கினார் ஒருபுலவர். கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்பது அவர் பெயர். தலைவி தரும் தோளின் இன்பம்; அவ்வின்பத்தை நீத்துச் செல்வதால்தான் அடையும் துன்பம் இவற்றை எண்ணி உருகினான் அத்தலைவன் என்பது புலவர் கூறவிழைந்த கருத்து.

இந்தக் கருத்துபடப் பாடிய புலவர் பலர்; ஆயினும், எண்ணி எண்ணிச் சுவைத்துப் போற்றும் வகையில் அப்புலவர் பாடலமைத்த முறை உள்ளதே அது வியக்கத்தக்க ஒன்று! கரிகாலன் மகிழ்ந்தளித்த நூறுயிரம் பொன்னையும் பரிசிலாகப் பெற்றது அந்தப் பாட்டு!

அகப்பொருள் கூறும் துறையை ஒட்டி எழுந்த அந்தப் பாடல் முழுதும் கரிகாலனையே புகழ்வதாக முடிகின்றது; ஆனல் அத்தலைவன் பெயரும் காணேம்; தலைவியின் பெயரையும் காணேம். கரிகாலன் பெயரும் அவன் ஆண்ட காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பும் அவன் செங்கோலும் வேலும் பெற்ற பெருமையும் விளக்குகிறது அந்தப்பாடல் முழுதும். பொருளோ தலைவன் தன் நெஞ்சுடன் கூறிக் கொள்வது பற்றியது.

நெஞ்சே! நான் தலைவியைப் பிரிந்து வாரேன்! நான் பிரிந்து சென்று தேடிக்கொண்டுவந்து சேர்க்கும் பொருள் எவ்வளவு ஆனல்தான் என்ன? அப்பொருள் வேண்டாம்; ஏன்? புகார் நகரில் உள்ள வளமெலாம் திரட்டிக்கொண்டு வந்து சேர்த்தாலும் அதனை வேண்டேன்; காவிரிப்பூம் பட்டினமே பெற்றாலும் நான் தலைவியை விட்டுப் பிரியேன் ஏன் தெரியுமா? அவள் தோளை அணைப்பதால் பெறும் குளிர்ச்சியும்—இன்பமும் உளதே அக்குளிர்ச்சி கரிகாலன் கையுள்ள செங்கோலினும் குளிர்ந்தது! அவன் செங்கோல் மக்கட்குக் கொடுமையைத் தந்ததில்லை; வெம்மையைத் தந்ததில்லை; அவன் செங்கோலினும் மிகக் குளிர்ச்சிதரும் தண்தோளைவிட்டு நான் வரமாட்டேன் என்று நெஞ்சுடன் கூறுகிறன் அவன். 'நான் பிரிந்து செல்லும் பாலை இருக்கிறதே அந்தப் பாலையின் கொடுமையை உணர்த்துவது என்னல்தான் முடியுமா? அப்பப்பா! அந்தக் கொடுமைக்கு உவமையாக ஒன்று சொல்ல வேண்டுமானல் எதுவும் இல்லை; பகைவரை அச்சுறுத்தும் கரிகாலனின் கொடிய வேலினைத்தவிர ஆம்! அந்த ஒன்றுதான் அந்தப் பாலைநில வெப்பத்துக்கு உவமையாகும்! ஆகவே நான் எப்படி தண்ணிய தோள்தரும் இன்பம் நீக்கி வெம்மை தரும் பாலைநிலம் கடந்து சென்று பொருளீட்டிக் கொணர முடியும்? என்பதே அத்தலைவன் நெஞ்சில் எழுந்த போராட்ட அலைகள் ஆகும்.

காவிரிப்பூம்பட்டினமே பெற்றாலும் தலைவியை விட்டுப் பிரிய நினையாத அவன் புகாரின் வளத்தையெலாம் எண்ணி எண்ணிப் பார்க்கின்றான் என்று பாடலை அமைக்கின்றார் புலவர். அந்த நாட்டு நீர் வளம்; நிலவளம், நகர்வளம் இவ்வளத்துடன் கூடிய மக்களின் மனவளம், காலைமுதல் மாலைவரை அம்மக்கள் களித்து மகிழும் நிகழ்ச்சிகள், அந்நாட்டுக் கடற்கரை வளம், புகார் நகரின் வாணிகம் நிகழும் அங்காடிகள்; அங்குள்ள வணிகர் வாழ்க்கைமுறை இவற்றையெலாம் எண்ணுவதாகப் படம் பிடித்துக் காட்டு கின்றார் அப்புலவர்.

வானம் பொய்த்தாலும் தான் பொய்யாக் காவிரி பாயும் நாடு, என்ற தொடக்கத்துடன் புலவர் பாடலை ஆரம்பிக் கின்றார்; நாட்டு வளத்தை நீர்வளம் கொண்டு சிறப்புறுத்து கின்றார். இத்தகு நாட்டில் விளையுளுக்குப் பஞ்சமா? அங்குள்ள எருமைகளும் வயல்களிலுள்ள செந்நெற் கதிர் களைத் தின்றுவிட்டுத் தூங்கும் வளமான வாழ்வு பெற் றுள்ளனவாம் அங்கே!

காய்ச்செந்நெல் கதிர்அருந்தி
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழல் துயில்வதியும்

அங்குள்ள மகளிர் முற்றத்தில் நெல்லை உலர வைத்துள்ளார் களாம்; கோழிகள் உண்ண வருகின்றன; உண்ண வரும் கோழிகளை விரட்டியடிக்க வேறுபொருள் கிட்டவில்லையாம் அவர்கட்கு! செல்வச் செருக்குமிக்க அப்பெண்கள் காதி லணிந்த குழையைக் கழற்றி வீசி விரட்டுகின்றார்களாம் புதல் வர்கள் உருட்டி விளையாடும் சிறுதேர்களுக்குத் தடையாக அக்குழைகள் வீதியில் உள்ளனவாம்!

நேரிழைமகளிர் உணங்குணுக் கவரும்
கோழிஎறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின்று உருட்டும்
முக்காற்சிறுதேர் முன்வழி விலக்கும்.

இத்தகு வளமுடைய அந்நாட்டு மக்கள் உடலுரம் உடையவர்; மகிழ்ச்சி நிறைந்த இன்பமான வாழ்க்கை உடையவர்; அந்நாட்டு மக்களின் ஒருநாள் வாழ்வைக் கூறுதல் மூலம் மக்களின் வளத்தையும் நாட்டுவளத்தையும் கூறுகின்றார் புலவர். ஓய்ந்த நேரத்தில் பொதுவிடத்தில் கூடி மற்போர்

செய்தல் கண்டு களிக்கின்றனராம். மாலைக் காலம் அவர்கள் நேரம் கடற்கரையில் கழிகின்றது; கடற்கரையில் முழுநிலவு நாளன்று அவர்கள் கடலாடி மகிழ்வதைப் பாடல் விளக்கும் போது நெஞ்சமெலாம் பூரிப்படைகின்றது! இயற்கையோடு கலந்து இன்புற்று வாழ்ந்த போராட்டமில்லாத வாழ்வை யல்லவா கரிகாலன் செங்கோல் அம்மக்கட்கு அளித்துள்ளது?

மலிஓதத்து ஒலிகூடல்
தீதுநீங்கக் கடலாடியும்
மாசுபோகப் புனல்படிந்தும்
அலவன்ஆட்டியும் உழவுத்திரையுழக்கியும்
பாவைசூழ்ந்தும் பல்பொறிமருண்டும்
அகலாக்காதலொடு பகல்விளையாடி

வாழ்கின்றனர் மாலைக்காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்த அவர்கள் மட்டுநீக்கி மதுவுண்டு களித்து நாள்தோறும் அணிந்து சலித்த வெறுப்பினால் பட்டாடை நீக்கித் துகில் உடுத்து உறங்கி இரவைக் கழிக்கின்றனராம்.

இந்த மகிழ்ச்சியையெலாம் அந்நாட்டு மக்கட்கு அளிப்பது எது கரிகாலன் செங்கோல்! இந்த வளமான வாழ்வைப் பெற்ற அவர்கள் சோம்பித் திரிகின்றனரா? வாழ்க்கை களியாட்டத்திலேயா கழிகின்றது அவர்கட்கு? இல்லை—களியாட்டமும் இருப்பது கருதி அவர்கள் சோம்ப லுடையவர் என்றும் கருதிவிட முடியாது, என்றுணர்த்தும் வகையில் அடுத்தபடியாக அந்நாட்டு வாணிக நிலையைப் பாடல் கூறுகின்றது. வெளிநாடுகளிலிருந்துவரும் பொருள்கட் கெல்லாம் சுங்கம் விதிக்கப் படுகிறது. மற்ற நாட்டுப் பொருள்கள் இறக்குமதி அதிகமானால் அந்நாட்டின் பொருள் வளம் உயருமா? அதற்கேற்ற ஏற்றுமதியும் அமைய வேண் டாமா? என்ற ஐயத்தை அழகாக விளக்குகிறது பாடல்.

கடலிலே நீர் முகந்த மேகம் மலையில் பொழிந்து இறுதி யில் கடலுக்கே அளிப்பது போல நீரின் வந்த பண்டம் நிலத்து ஏற்றிவைக்க, நீர் வழி அனுப்புதற்காகக் கொணரப்பட்ட அந்நாட்டுப் பொருள்கள் துறைமுகத்தில் மலைபோல் குவிந் துள்ளதால் அளந்து கூற முடியவில்லையாம் புலவருக்கு!

'வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடல்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்துஏற்றவும்
நிலத்தினின்று நீர்பரப்பவும்
அளந்தறியாப் பல்பண்டம்'

என வியம்புகிறார் புலவர்.

இவ்வாறெலாம் கூறி அந்நாட்டுக் கடை வீதிகளையும் வளத்தையும் கூறி அங்கு மலிந்துள்ள பொருள் வளத்தை விளக்குவதோடமையால் இச்செல்வமெலாம் அறத்தினின்றும் தவறிச் சேர்த்ததன்று! அறத்தின் வழி ஈட்டிய வளம் என் றுணர்த்தக் கருதிய புலவர் அந்நாட்டு வாணிகர் இயல்பைக் கூறுமுகத்தான் அறிவிக்கின்றார். அவ்வாணிகர் மிக நல்லவர்; நடுநிலையுடையவர்; பொருளின் விலையைச் சொல்லி தனக் குரிய இலாபத்தையும் சொல்லிப் பொருளை விற்கும் தன்மை யர்; கொள்ளையடித்துப் பொருளீட்டும் வன்னெஞ்சர் அல்லர் பழிக்கஞ்சிப் பொருள் விற்கும் நன்னெஞ்சினர். பிறர் பொருளையும் தம் பொருளாகக் கருதும் நல்லவர்கள் அவர்கள்.

வடுஅஞ்சி வாய்மொழிந்து
தமவும்பிறவும் ஒப்பநாடி
கொள்வதுஉம் மிகைகொளாது
கொடுப்பதுஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்

வணிகர் அவர்கள் அறத்தால் மலிந்த செல்வமாகலின் குறை யாத வளமும் வாழ்வும் அங்குண்டு.

இவ்வளவு வளங்களையும் கொண்டுள்ள புகார் நகரத்தை யும், அதன் வளத்தையுமெல்லாம் எண்ணி அதையே வேண் டாம் என்று புறக்கணித்துத் தலைவியின் தோள்தரும் இன்பம் ஒன்றை நாடுகிறதாம் தலைவனின் மனம்.

"முட்டாச்சிறப்பின் பட்டினம்பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாதிய நெஞ்சே"

என்கிறான் தலைவன்.

இவ்வளவு வளமும் நிறைந்ததாகக் காட்டிய புலவர், யாருடைய செங்கோலைச் சிறப்பித்து புகார் வளம் காட்டி னாரோ—புகழ்ந்தாரோ—அவன் கையில் உள்ள வேலினையும் சொல்லிக் கொடுமையான பாலைநிலத்தை விளக்குவதைப் படிக்கும் போது அப்புலவர் திறனை உணர முடிகின்றது கொடுமையும்—குளுமையும் இரண்டினுக்கும் உவமையாக அமைவன கரிகாலனிடம் உள்ளன. அல்லவா? ஆகவேதான் கரிகாலன் செங்கோல் அளிக்கும் குளிர்ச்சியைத் தரும் தலைவி யின் தோளைவிட்டு அவன் வேல் போல் கொடுமை தரும். பாலையைக் கடக்க அவனுக்கு மனமில்லை.

காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த மக்கள் வளத்தை உணர்த்தும் வாயிலாகக் கரிகாலன் அருள் உள்ளத்தை உணர்த்திய புலவர் அவன் வேலின் கொடுமையைக் கூறிப்

பாலைக் கொடுமைக்கு உவமித்து அவன் வீரத்தை விளக்கு கின்றார்.

கரிகாலன் வீரத்தை அவன் வேலினைக்கொண்டு பாலை நிலத்துக்கு உவமை கூறிய புலவர் அவன் வேல் விளைத்த கொடுமையையெலாம் பிற்பகுதியில் விளக்குந்திறம் அருமை யுடையது. அவன் அருளால் பெருகிய புகாரின் வளத்தை அதிக அளவில் பாராட்டிவிட்டு அவன் வீரம் விளைத்த கொடுமைகளை அதிகமாகப் பாராட்டாமல் சுருக்கமான அள வில் புலப்படுத்தி விடுகின்றார் புலவர். அழகும் எழிலும் மிக்க நாடுகளெலாம்—பகைவர் நாடுகளெலாம் இவன் வேல் அழித் துளது; எத்துணை பெரிய மாமன்றங்கள் அவர் தம் நாட்டில்! இசையொலி எழுந்தவாறே இருந்த அவற்றிலெலாம் இன்று கோட்டான் ஒலி கேட்கிறது. அரண்மனைகளையெலாம் தரை மட்டமாக்கிய 'அவன் வேலினும் பாலை கொடியது' என்று தலைவன் உருகுகின்றான். அவ்வாறு உருகுவதாகப் புலவர் பாடலை முடிக்கின்றார்.

அரிமா அன்ன அணக்குடைத் துப்பின்
திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே!

இவ்வாறெலாம் எண்ணுகின்ற தலைவன் பயணத்தைத் தடுத்து நிறுத்திவிடுவானா? இல்லை; அப்படிச்செய்யின் அவன் ஆண்மைக்கு இழுக்கு அது என்று கடிந்து கூறுவர் இலக்கண நூலார். அவன் தலைவியைப் பிரிந்தானே இல்லையோ? அவன் போராட்டத்தை விளக்குதல் வாயிலாகப் பண்டைப் புகாரைப் படமாக்கினார் புலவர்.

பாலை—பட்டினம்; வீரம், ஈரம்; ஆண்மை — இருள்; இவற்றையெலாம் ஒன்றாக்கிச் சிறப்பித்துக் கரிகாலன் கோலை யும் வேலையும் பெருமைப்படுத்திய 'பட்டினப்பாலை' நமக்கு நல்ல படிப்பினையை உணர்த்தட்டும்! தமிழகம் பட்டின நிலையை அடையட்டும் பாலைகள் பட்டினம் ஆகட்டும்!

உடம்படு மெய்

பண்டித. மு. பெருமாள், புதுவை.

பொதுவாகத் தமிழ் இலக்கணம் கற்பார் அனைவரும் அதனை ஒரு வெறுப்புப் பாடமாகவே பயின்று வருகின்றனர். இம்முடிவு இவர்க்கன்றி ஏனை ஆங்கிலம், பிரஞ்சு போன்ற பிற மொழி இலக்கணங் கற்பார்க்கும் ஒக்கும். காரணம், எத்துணையோ விதிகள் அவற்றில் சிலவற்றிற்கு விலக்குகள் முதலியன மலிந்துள்ளமையேயாம். சிறப்பாகத் தமிழிலக்கணம் பற்றிச் சொல்ல வேண்டுமானால், விளங்காத நூற்பாவை விளங்க வைக்க எழுந்த பல்வேறு உரைகள்—மறுப்புரைகள்—ஆய்வுரைகள் முதலாயினவற்றிற்கு அளவில்லை. ஆயினும், இவையாவும் உண்மைப் பொருளைக் காண்டற்காகவே எழுந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. குற்றமுள்ள எவற்றையும் அறிவுலகம் ஏற்கா தென்பது தெளிவு. இது நிற்க.

தற்செயலாக, யான் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. வித்துவான் வெள்ளை வாரணம் அவர்கள், வித்துவான் இறுதி நிலைத்தேர்வு எழுதப் புகும் மாணுக்கர் நலங்கருதி, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரைக்கு வினு விடைகளாக எழுதிய ஒரு சிறு நூலை நண்பர் ஒருவரால் கிடைக்கப் பெற்றவனுய்க் கண்ணுற்றேன். இந்நூலுள், ஆசிரியர் உடம்படு மெய் பற்றி மாறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளமை பற்றி இக்கட்டுரை எழுதத் துணிந்தேன். வருமாறு :—

"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்"

என்ற உடம்படு மெய் பற்றிய தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்கூறி, இளம்பூரணர், நச்சினர்க்கினியர் என்ற இரண்டு உரையாசிரியர் உரைகளை விதந்து கூறுவாராக "மூவகைப்பட்ட மொழிக்கும் உயிர் முதன் மொழியாக வருமிடத்து இடை உடம்படு மெய் வடிவுகோடலை நீக்கார்" என்று இளம்பூரணரும் "நிலை மொழி வருமொழியுமாய்ப் புணரும் எவ்வகை மொழிக்கும் உயிர் முதன் மொழியாக வருமிடத்து உடம்படு மெய்யானது வடிவை உயிரீறு கோடலை நீக்கார்—கொள்வர்" என்று நச்சர்கொண்ட பொருளைக் காட்டிய ஆசிரியர் அவர்கள், தமதாய்வுரையில் "எல்லா மொழிக்கும்" என்ற தொடருக்கு "மூவகைபட்ட மொழி" என இளம்பூரணரும் "நிலைமொழி வருமொழி" என நச்சரும் உரை எழுதினர். இளம்பூரணர் மூன்று என்ற தொகையை விளக்கிற்றிலர். இனி, நச்சர் வருமொழி என்று உரைத்தது பொருந்

தாது. எல்லா மொழியும் என்பது ஈண்டு நிலைமொழியை மட்டுமே குறித்தலின். இனி, இவ்வுரையாளர், இருவரும் எல்லா மொழியும் என்பதனை உயிரீற்று மொழியாக மட்டுமே கொண்டனர். இதுவே தொல்காப்பியர்க்கும் கருத்தாயின் "உயிரீறு மொழிமுன் உயிர்வரு வழியே" என்று சூத்திரிக்க வேண்டுமேயன்றி (எல்லா ஈற்றையும் தழுவி) எல்லா மொழிக்கும் என்று சூத்திரிக்க நியாயமில்லை. எனவே, இளம்பூரணர் நச்சர் உரைகள் பொருந்தா என்பதும் மூன்றாவது உரையே பொருந்தும் என்பதும் புலனாகின்றன—என்றார்.

இறுதியில் கண்ட மூன்றாவது உரை புலவர் வெள்ளை வாரணம் அவர்கள் தாமே உரைத்த உரையாம்—வருமாறு:—

"இனி, உயிரீறு மெய்யீறு, குற்றுகர ஈறு என மூவகைப் பட்ட ஈற்றான் வரும் எல்லா மொழிக்கும் உயிர் முதன் மொழியாக வரும்போது உடம்படு மெய்யின் வடிவு கோடலை நீக்கார் ஆசிரியர் என்பது" இவ்வுரைக்கு எடுத்துக்காட்டாக,

1. மணி + அழகு = மணியழகு (உயிரீற்றின் முன் உயிர்வர யகர உடம்படு மெய் வந்தது)
2. விண் + வத்து = கொட்கும் விண்வத்துக் கொட்கும் (மெய்யீற்றின் முன் உயிர்வர வகர உடம்படு மெய் வந்தது)
3. வன்கணது + ஏ = வன்கணனதுவே (குற்றுயலுக ஈற்றின்முன் உயிர்வர வகர உடம்படுமெய் பெற்றது. திருக்குறள் 764–ன் பரிமேலழகர் உரை காண்க.)

மேற்கூறிய இவ்வுரையும் உதாரணங்களும் பொருந்துமா? என்பதைப் பார்ப்போம்.

"எல்லா மொழிக்கும்" என்ற தொடருக்கு உயிரீறு, மெய்யீறு, குற்றுகர வீறு என மூவகைப்பட்ட ஈற்றான் வரும் எல்லா மொழிக்கும்" என்று கூறுகின்றனர்.

இதனுள்,

1. உயிரீறு எல்லா ஆசிரியர்க்கும் உடன்பாடுடையது.
2. மெய்யீறு என்பது சற்றும் பொருந்தாது. என்னை?

மேற்படி ஆசிரியர் மெய்யீற்றிற்கு உதாரணமாக விண் + அத்து + கொட்கும் எனக் காட்டி மெய்யீற்றின்முன் உடம்படு மெய் வந்தது என்றார். இவ்விடத்து வகரம் உடம்படு மெய்யன்று. உடம்படுமெய் அன்றெனக் கூறும் மெய் என்பது சங்கர நமச்சிவாயர், இராமாநுசக்கவிராயர் போன்றார் கருத்தாம். இதனை நன்னூல் 162–ஆம் சூத்திரத் துரையில் (இ ஈ ஐ வழியிவ்வும்......ஆகும்) "விண் வத்துக் கொட்கும்" என மெய்யீற்றின் வழியும் உயிர்வரின் உடம்படு மெய் பெறும் என்பாரும் உளராலோவெனில்:- உயிரீற்றின்

முன் உயிர் முதல்வரின் உயிரோடுயிர்க்கு மயக்கமின்மையிற் புணர்ச்சியின்றி விட்டிசைத்து நிற்குமாகலின் உடம்படாத அவ்விரண்டும் உடம்படுதற்பொருட்டு இடையே வருமெய்யை உடம்படுமெய் என்ப வாகலின் வருமுயிரேறி ஒற்றுமைப்பட்டுப் புணர்தற்குரிய மெய்யீற்றின் வழித் தோன்றும் மெய்யை உடம்படு மெய் என்பது பொருந்தாது" என்று கூறி, அடுத்த சூத்திரத்தில் (163) விண் வத்துக் கொட்கும்" "சார்வுழிச் சார்ந்த தகையன்" "செல்வுழிச் செல்க" என்று உதாரணம் காட்டி, மெய்யீற்றின் முன் வருங்கால் இங்ஙனம் உடம்படு மெய் அன்றெனக் கூறும் வகரந் தோன்றின எனக் கூறியுள்ளார்.

இக்கருத்து, வடமொழி, தென்மொழி நிலைக்கண்டுணர்ந்த சிவஞான முனிவர்க்கும் உடன்பாடாம். என்னை? தொல் காப்பிய முதல் சூத்திர விருத்தியில் "விண் வத்துக்கொட்கும் வண்ணத்தமரர்" என்புழி வகரமுடம்படாதவற்றை யுடம் படுத்த வந்ததல்லாமையின், இன்னோரன்னவை உடம்படு மெய்யெனப் பெயர்பெறுமாறில்லை என்பது" என்று கூறியுள்ளார் என்க.

3. குற்றியலுகர வீறு (வன்கணதுவே.) என்றால் எனில், கூறுதும். இக்குற்றியலுகர வீறு விதி விலக்கானது. பெரும் பாலும் உக்குறள் ஓட எஞ்சிய மெய்ம்மீது உயிர் ஏறி முடிவதே இயற்கை. "வன்கணதுவே" "தன் முகமாகத் தான் அழைப் பதுவே" போன்றன மிகமிக அருகி வருவன. அதனால்தான், நன்னூலிலும் உரையாசிரியர்கள் எல்லாரும் இன்னோரன்ன வற்றை இலேசினாற் கொண்டனர் என்க.

எனவே, புலவர் வெள்ளைவாரணம் உரைபோலி உரையின் பாற்படுவதை உணர்க.

இனி, இளம்பூரணர் உரை பொருந்தா வுரையா? இல்லை என்னை?

இளம்பூரணர் "எல்லா மொழிக்கும்" என்பதற்கு "நிலை மொழிகள் எல்லாம்" எனச் சாதாரணமாகவும் பொதுவாகவும் பொருளெழுதிப் போகாது மூவகைப்பட்ட மொழி என எழுதி யது ஒரு பயனோக்கியே யாம். என்னை யெனில்? தொல் காப்பியத்திற்கு முறையாகப் பொருளெழுதிப் போகின்று ராகையால், முன்னர்த் தொல்காப்பியர் கூறிய மொழி நிலை மூன்றின் தன்மையை (ஓரெழுத் தொருமொழி.........." என்ற நூற்பாவை) நினைவூட்டுவான் வேண்டியே யாம். எத்தகைய நிலை மொழியும் இம்மூன்றிலொன்றாய் அமைதல் ஒரு தலை. அம்மொழி விகாரப்பட்டு முடிதல் சிறுபான்மையாகலான் "ஒன்றென முடித்தலில்" அடக்கினர். எனவே, "எல்லா மொழிக்கும் என்ற தொடரிலுள்ள எல்லாம் என்ற தொகுதி ஒருமைச்சொல் தொல்காப்பியர் முன்னர்க்கூறிய ஓரெழுத்

தொருமொழி, ஈரெழுத்தொரு மொழி, இரண்டிறந்திசைக்கும் தொடர் மொழி என்ற மொழி மூன்றினைக்குறித்து நின்றது என்பதில் ஐயமில்லை. அவ்வாருயின் ஏன் உரையாசிரியர் அவற்றை விளக்கிற்றிலர் எனில், விளக்க வேண்டிய அவசிய மில்லை. முன்னர் இல்லாத வழியன்றே விளக்க வேண்டியது. பயின்றவற்றை நினைவிற் கோடலே மாணக்கர் கடமை. அவர்கள் தாம் பயிலே வேண்டிய நிலையின் இழிந்து கற்பாரா யின் அதற்குப் பொறுப்பாளி யார்? உரையாசிரியரா? இஃது கற்பாராது கல்வி அறிவைத்தான் காட்டுகிறது.

இனி, மூவகை என்பதற்கேற்ப உதாரணம் காட்டிற்றிலர் எனில், கூறுதும்.

தீ + எழுந்தது = தீயெழுந்தது.
மணி + அழகியது = மணியழகியது.
நனந்தலை + உலகம் = நனந்தலையுலகம்

என்பன போன்ற உதாரணங்கள் உரையாசிரியர்க்குத் தெரி யாமல் இருத்தல் இயல்பாமோ? இல்லை. பெரும்பாலும் உரையாசிரியர்கள் தங்களுக்கு உதாரணங்கள் தெரியவில்லை என்ருல் "வந்தவழிக் கண்டு கொள்க" என்றே சொல்லிப் போதல் வழக்கமாக இருந்து வந்தது. இன்னும் அவர் இம் முறையில் உதாரணம் காட்டவில்லை என்ருல் அதுவும் ஒரு பயனேக்கியே யாம். என்னை? புணரியல் நூற்பாவுக்கு உரை எழுதிப் போகின்ருராகலானும் சாரியைப் பேற்றிற்குப் பிறகு உயிரெழுத்தின் புணர்ச்சிக் கூறுகின்ருராகலானும் உடம்படு மெய்க்கு, உரையாசிரியர் தாம் காட்டிய காட்டுக் களை எல்லால் சாரியைப் புணர்ச்சிக்கு ஏற்றவையாகவே அமைத்தார்.

எனவே, இளம்பரணர் கூறிய உரையும், உதாரணங்களும் இயைபுடையனவே என்பது போதரும்.

நிற்க, நச்சர் கூறிய "நிலைமொழி வருமொழி" என்பது பொருந்துமோ எனில். பொருந்தும். என்னை?

ஒரு வாக்கியத்தில் பல சொற்கள் இருக்கலாம். அவை ஒவ்வொன்றையும் நோக்க ஒன்று நிலைமொழியாகவும் மற்றென்று தொடர் மொழியாகவும் இயைதல் நோக்கி அவ்வாறு கூறினர் என்க. அதுவும் ஒரு வகையில் பொருத்த முடையதேயாம்.

மேற்கண்டவற்ருல், புலவர் வெள்ளைவாரணம் அவர்களின் உரை பொருந்தாமையோடு, இளம்பூரணர், நச்சர் உரைகள் பொருந்துவனவே என்பதும் வெள்ளிடை மலை.

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்" குறள்.

மெய்ப் பொருள்

(திருவாட்டி மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

தமிழ்ப் பொழில் மலரின்கண் (மலர் கூ,எ) 'மெய்ப் பொருள்' என்பதோர் இதழ்விரிந் திலகியது. அப்பர் பெருமானார் வரலாற்றுண்மை காண விழைந்த ஆய்வாளர் தம் கட்டுரையாய அஃது அறிவாற்றினின்று மெய்யாற்றைக் காணுமாறு பணிக்கிறது. இக்கோட்பாடுதான் யாவர்க்கும் ஒப்பமுடிந்த தொன்றே ஆயினும் சிறியேஞ் சிந்தையிலே சிற்சில ஐயங்களெழுந்துள்ளன. அவைதம்மை அவ்வறிஞர்க்கும் ஏனைய தமிழ்ப்புலவர்க்கு முணர்த்தின் அவை களையும் நெறி கற்பிப்பர் என்னுங் கருத்தானே இக்கட்டுரை வரைகின்றேன்.

நாவினுக்கரையர் நஞ்சை நலிவித்த நீர்மையும் பொங்கு வெந்நீற்றறையைப் போதார் பொய்கையாக்கிய பெருமையும் 'அன்பு நெஞ்சஞ்சார்ந்த—சொல்வேறு செயல் வேறுபடாத— அன்பர்களின் பாதுகாவலின் உதவியாலேயே ஆக்கம் பெற்றன என்பது கட்டுரையாளர் துணிபு. 'அப்பரும் இயல்வன எல்லாம் இறைமையா'க் கண்டமையான் "மாசில் வீணையும்" என்ற பதிக மருளிச் செய்தன ரெனவும் இவை தம்மைச் சிவனாரின் செயல்மேலிட்டுச் சேக்கிழாரும் புனைந்துரை செய்தனர் எனவும் கட்டுரையாளர் கூறுகிறார்.

ஆரூரர் ஒற்றியினின்றும் நீங்கிய பிழையால் விழியிழந்தன ரென்னுஞ் செய்தி பெரிய புராணத்தும் பயிலப்படுகிறது.

"சங்கிலிக் காகவெண் கண்கொண்ட பண்ப"

எனவரும் ஆரூரர்தம் திருவாக்கானும் அறியப்படுகிறது. இறைவன்பாலீர்த்த அன்பே தம்மைப் பிறழச் செய்ததாக அச்செயற்காக ஒறுக்கப்படுதல் இறைவனருட்பெரு வெள்ளத்துக்கே அவம்விளைப்பதாம் என்பதைச் சுட்டி

"பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்கால்
பழியுளன பாராதே படல மெண்கண் மறைப்பித்தாய்,"

எனக்கூறி இறைஞ்சுகின்றார்.

பற்பல விதங்களாற் பரவியும் பரமன் விழியருளாமை கண்டு

"குழைவிரவு வடிகாதா கோயிலுளாயே"

எனச் சுந்தரர் வினவியதும் அக்காலை உழையுடையான் உள்ளிருந்து

"உளோம் போகீர்"

என விடையிறுத்தமையும் தேவார மூலமே பெறப்படுகின்றது. அன்றியும்,

"கால காலனைக் கம்ப னெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்ற வாறே"

எனவுங் கச்சியம் பதியில் தம் கண்மீண்ட செய்தி கூறிக் களிக்கின்றார் தம்பிரான் தோழர். இந்நிகழ்ச்சியின் மெய்யாறு காணுந்திறம் யாதோ என்பது என் ஐயம்.

நாவின் மன்னரைக் கற்றுணை பூட்டிக் கடலிற் பாய்ச்சிய பொழுதத்தும் உற்றுழி உதவியது 'மெய்த்தவக்குழாமே' என்பது ஆசிரியர் முடிவு. ஆயின் கற்றுணை பூட்டிக் கடலிற் பாய்ச்சிய பின் ஒருவர்க்குய்திதர விழைவா ரெத்துணைத் திறல் படைத்தவரே யெனினும் அவர் தொகையான் எண்ணிலரே யெனினும் அவர்க்கியல்வ தொன்றன்று என்பதனை ஏனோ இவ்வாய் வாளர் எண்ணிற்றிலர். மற்றும் வயக்களிறு வயப்படுத்திய நிகழ்ச்சிக்கு நேரிய மெய்யாறு காட்டிற்றிலர்; அமணரையும் அரசனையும் வஞ்சஞ்செய்து அப்பருக்குதவியது 'மெய்த்தவக்குழாமே' யெனின் அதனை மெய்த்தவக்குழாமென்பதினும் பொய்த்தவக்குழாமெனலேசாலும் என்னை? இக்குழாம் சொல்வேறு செயல்வேறு பட்டதனால் என்க. அப்பருழை இயன்ற இறைமைச் செயல்களுக்கு ஆசிரியர் காட்டிய மெய்யாறு புதுவது மன்று. இம்மெய்யாறையே எம் சமயச் சார்பான் அறிந்த மணிமந்திர மருந்துகளாலேயே மருணீக்கியார் உய்வு பெற்றார் என்று அமணர்கள் கூற்றாக அருண்மொழித்தேவர் காட்டுகிறார்.

மேலும் மாற்ற மனங்கழிய நின்ற மறையோனின் இறைமைச் செயல்கள் நம் மதியி னெல்லைக்குள் படுவதில. அவனுக்கு அடிமை பூண்டோரும் 'கற்றோரறியா அறிவினர்; கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்' ஆதலின் அஃதும் அளவிடற்கடங்குவதன்று எனவே நம் அறிவினெல்லைத் துணைக்கொண்டு அளக்கப்புகுதல் 'குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக் குருடுங் குருடுங் குழிவிழுமாறே' என்ற மொழிக்கிலக்கியமா யமையும். என்னையோ காரணமெனில் நம் அறிவு நிறைவுடையதன்று, குறைவுடையது. அத்தன்மை 'கற்றனைத்தூறும் அறிவு' என்ற குறளான் நனி விளங்கும்.

இறைமைச் செயல்கள் இயற்கையி னிகந்தவை யாதலின் புனைந்துரையென இப்புலவர் புகலுதலை நோக்குழி இவர் தம் வாழ்நாளில் வியத்தகு செயல்கள்—இறைமைச் செயல்கள்—ஒன்றேனும் நிகழும் பேறோ காணும் பேறோ பெற்றன்றில்லை யென்றே கோடல் வேண்டும். இவ்வாசிரியர் திரு. வி. க. அவர்களின் 'உள்ளொளி' என்னும் நூலை ஒருமுறை கற்றல் நலம் பயக்கும். புழுத்த நாயினுங் கடைப்பட்ட இப்புல்லறிவினேன் வாழ்நாளில் ஓரிரு விந்தைச் செயல்கள் நிகழ்ந்துள்ளன, அதில் ஒன்று ஈண்டு பொறித்தல் அமையும்.

1944 ஆம் ஆண்டு தக்கார் காவலுடன் ஆடிக்கிருத்திகை விழாக் காணத் தணிகை சென்றேன். திரும்புங்காலை கைப் பொருளும் காவல் துணையும் இழந்தேன். ஐம்பது கல்தொலைவுள்ள எம் ஊருக்குக் கால் நடையாகவே செல்ல நேர்ந்தது. பேரிக்காய் நிறைந்த பை ஒன்று வழிச் சுமையா யமைந்தது. பசிமிக்கும் பிறர் பொருளாய அக்காயை எடுத்துண்ணக் கைகூசியது. பைங்கடப்பந்தாரானை நோக்கிப் புலம்பிக் கொண்டே சோளிங்க புரஞ் சேர்ந்தேன். அவ்வூரைக் கடக்குங்காலை உடல் முழுதும் கருமையும் நுதல் மட்டும் நீறு பூசியது போன்ற வெண்மையுங் கொண்ட ஞமலி ஒன்று என்னைப் பின்தொடர்ந்தது. சிறிது நேரத்தில் வழியும் பிழைத்து காடெனத் தோற்றந்தரும் அல்லல் நெறிக்கண் புகுந்தேன். வழிமுழுவதும் குரங்குகள் என் கையிலோ பைநிறைய பேரிக்காய். இதுகண்ட நாய் முன்னுலோடிக் குரங்குகளை விரட்டித்திரும்ப என்னுழைவந்தது. வழியிற் குரங்குகள் எதிர்படும்போதெல்லாம் அது இவ்வண்ணம் வினையாற்றி என்னைப் புரந்தளித்தது. இவ்வாறு அல்லல் நெறிப் பட்ட இருபதுமைல் அளவும் என்னைப் பின்தொடர்ந்தது. புரந்து செந்நெறிப் படுங்காலை கரந்தொளித்தது. வாலாசாப் பேட்டையில் செந்நெறிப் படர்ந்தயான் வழியில் கண்ட காவடியாட்களோடு சிறிது உரையாடி என் கதையினைச் சொல்லி நாயையும் காண்பித்தேன் அதனை அவர்கள் உடன் கொண்டுசெல்ல விழைய 'அதுவரின் அழைத்துச் சென்மின்' என்றேன். பிறகு உண்ணக்கருதி எழுந்தகாலத்து அதனை யாண்டுங் காணப்பெறே மாயினம்.

மாந்தர் பயின்றறியா நெறிக்கண் ஆண்டில் இளையேனுய என்னைப் புரந்தளிப்பின் கருதி அல்லல் நெறியெல்லாம் தொடர்ந்து வந்து மாந்தர் வழித்துணையா யமைந்தகாலை மறைந்த திறத்துக்கு மெய்ப்பொருள் காண்டல் எவ்வண்ணமோ?

சென்ற ஆண்டு நஞ்சருந்தியாதொரு முறிப்பு மருந்து முண்ணது இதுவரை உயிருடன் யான் இருக்கின்றேன். ஆயினும் வாந்தி மட்டும் மிகவும் அல்லல் விளைவித்து விட்டது. ஆயின் ஏற்ருனடிக்கே இரவோடு பகலும் பிரியாது வணங்கும் அப்பர் பெருமானை நஞ்சம் நலிவியாத செயல் ஒரு வியப்போ? அன்று என்க.

எனவே மெய்ப்பொருள் கட்டுரை யாசிரியர் கூற்றையும் மேலே காணும் எங்கூற்றையும் அறிஞர் நடுநிலை நின்று ஆய்ந்து உண்மை காண அருள்வாராக.

* கம்பன் காட்டிய இராமன்

V. இராசமாணிக்கம் எம். ஏ.,
P. S. G. கல்லூரி கோவை.

கம்பர் இராமனை விருப்பு வெறுப்பற்றவனாகக் காண்பிக்கின்றார். சான்றாக, மஞ்சனப்படலத்தில் "யானே சொல்லக் கொள்ள இசைந்தான் முறையாலே" என்று பாடுகின்றார். இந்த 'முறைமையாலே' என்ற தொடரால் யான் சொல்லத் தான் இசைந்தானே தவிர, அவனாக இசையவில்லை என்பதும், பரதனுக்கு அரசியல் உரிமை உண்டு என்பதும் பெறப்படும்.

"பெண்டிரின் கூற்றம் அன்னாள்
பிள்ளையைக் கொணர்க என்றாள்"

ஊரிலுள்ள மக்களெல்லாம் இராமனைத் தான்பெற்ற பிள்ளையைப் போல் எண்ணி மகிழ்ந்தனர் என்று ஓரிடத்தில் சொல்லுகின்றார்.

"தாயென நினைவான் முன்னே
கூற்றெனத் தமியள் வந்தாள்"

என்று கைகேயியைக் குறிப்பிடுகின்றார். "நீ ஈரேழாண்டுகள் காட்டிற்குச் சென்று வாழ்ந்து வா" என்ற சொல்லைக்கேட்டும் இராமன் விருப்பு வெறுப்பற்றவனாகக் காணப்படுகின்றான்.

"அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா" என்று கம்பர் குறிப்பிடுகின்றார். போரில் படைகள்தான் முதலில் செல்லும் இறுதியில்தான்—படைகள் அழிந்தால்தான் அரசர் போர்க்கெழுவர். ஆனால், இராமன் படைகளோடேயே சென்றுவிட்டான். இதற்குக் காரணம், கும்பகர்ணன், இந்திரசித் ஆகியோருடைய திறமையை இராமன் முன்பே யறிந்திருக்க வேண்டும். "இன்றுபோய் நாளைவா"—என்று பாடுகின்றார்.

"என்னை வென்று உயர்வரெனில்
உன்னை வெல்லல் எளிது"

என்று கும்பகர்ணன் தன் அண்ணனை நோக்கிக் கூறுவதால் இதனையறியலாம். கும்பகர்ணன் இராமன் திருமாலின் அவதாரம் என்பதை நன்கு அறிந்திருந்தான்.

"உன்னை நீயொன்றும் உணர்கிலைபோலும்
முன்னை ஆதியாம் மூர்த்திநீ"—

* ?-10-62 இல் நிகழ்ந்த கலைமகள் விழாவில் பேசியதன் சுருக்கம்

அவல வீரர்கள்

R. சிவானந்த வல்லியம்மையார், எம். ஏ.,
நிர்மலா மகளிர் கல்லூரி கோவை.

காப்பியத்தால் கலைஞன்பல பாத்திரங்களைப் படைக்கின்றான். அவற்றின் இயல்புகளைப் படைப்பவனும் அவனே. ஒருவனை நல்லவனாகவும்—நன்மதிப்புடையவனாகவும் படைக்கின்றான். அதனை இன்பியல் காப்பியமாகச் சொல்லினர். இன்னொருவன் சில குறைபாடுகளால் இழிந்தவனாக உள்ளான். மதிக்கண் மறுப்போல சில குறைபாடுகளால் எழும் காப்பியங்கள் துன்பியல் காப்பியங்கள் என்று சொல்லப்படுகின்றன, இது திறனாய்வுத்துறை இது மேனாடுகளில் மலிந்து காணப்படுகிறது. நம்நாட்டு இலக்கியங்கள் அனைத்தும் மதச்சார்புடையன.

அச்ச உணர்ச்சியையும் இரக்க உணர்ச்சியையும் எழுப்புவது அவலச்சுவை என்று இலக்கணம் வகுக்கிறார் அரிஸ்டாட்டில். இதற்கு எடுத்துக்காட்டாகச் சச்சந்தனைக் குறிப்பிடலாம். கெகல் என்பவர் இருதிறத்தாரிடையே நேர்கின்ற ஒருமுரண், அதுபெரும்பாலும் நல்லபண்புகளுக்கிடையே எழுகின்ற ரோட்டம் என்று குறிப்பிட்டு விவிலிய நூலில் சான்று காண்பிக்கின்றார். இதேநிலையை சேக்சுபியரின் 'ஹாம்லெட்' டில் காணுகின்றோம்.

விதியால் ஒருவன் அவலத்தலைவனாக ஆக்கப்படுகின்றான். பிராட்லி என்பவர், "அவல வீரருடைய முடிவு முன்பே தீர்ப்புச் செய்யப்பட்டதாகும், அது அவனுடைய தீய செயல்களினால் ஏற்பட்டு அதனாலேயே அழிகின்றான்" என்று குறிப்பிடுகின்றார். சான்றாக இராவணனைக் கொள்ளலாம்.

* 7-10-62 இல் நிகழ்ந்த கலைமகள் விழாவில் பேசியதன் சுருக்கம்

என்று திருமாலும் சிவனும் ஒத்துக் கொள்ளக்கூடிய நிலையில் பாடுகின்றார். மனிதநிலையிலும் திருமால் அவதரித்துக் காட்டியுள்ளார். மனிதநிலையில்தான் சில தவறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இராமனுக்கே தான் இராமன் என்பது தெரியாது, அதனால்தான் இறுதியில் 'நீயே திருமால்' என்று உணர்த்துகின்றார்.

கம்பர் காட்டிய இராமன் இருவகையினர். ஒருவர் எளிய மனிதப்பண்புடையவர். இன்னொருவர் திருமாலின் அவதாரமான இறைமைப்பண்பு பெற்றவர்.

அரிஸ்டாட்டில் கூறும் கருத்துக்குச் சச்சந்தன் சான்ருதலை உணரலாம். இவன் நாட்டில் எவ்விதக்குறையும் இல்லை. நாட்டில் செல்வம் மலிந்துகிடக்கின்றது. சிறந்த வீரன். இத்தகைய சிறப்புடைய சச்சந்தனின் வீழ்ச்சிக்குக் காரணம் இருக்க வேண்டும். தன் மாமன்மகள் விசயையைக் காதல் செயது மணம்புரிந்து இடையருத இன்பம் துய்க்க வேண்டுமென எண்ணுகின்ருன். இதற்குத் தடையாக அரசாட்சி இருப்பதையெண்ணி அதனைத் தன் நண்பன் கட்டியங்காரனிடம் ஒப்படைக்கின்ருன். சச்சந்தன் செய்த தவறு இரண்டு, காமத்தின் காரணமாக நாடுகாவலை ஒழித்தது ஒன்று. அதனை இன்னொருவனுக்குக் கொடுத்தது மற்ருென்று; விசயை கண்ட கனவின் காரணமாகத் தன் அழிவைச் சச்சந்தன் அறிந்தும், வாழ்வுக்கு வழிதேடவில்லை. ஏதோ தண்ணருளால் மயிற்பொறி செய்தான். அது தனக்காகச் செய்தது அன்று தன்மனைவியைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகச் செய்தான். தன் வீரத்துக்கு இழுக்கு ஏற்படக் கூடாது என்பதற்காக மயிற்பொறியில் தன்மனைவியை மட்டும் அனுப்பினுன். பின் போர்செய்து இறந்துபட்டான். சிறந்த பண்புகள் அனைத்தும் காணப்பட்ட சச்சந்தன் காமம் என்னும் சிறுசெயலால் அழிந்துபட்டான்.

விதி ஒருவனை அவலத் தலைவனுக ஆக்குகிறது. இதற்குச் சான்று கோவலன். கோவலன் வீழ்ச்சிக்கு வினையே காரணம். "யாழிசைமேல் வைத்து ஊழ்வினை உருவெடுத்து வந்து ஊட்டியது"—என்று பாடுகின்ருர் இளங்கோவடிகள்

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன் கொல்"

என்று வினையை மாடல மறையோன் கூற்றிலே வைத்துப் பாடுகின்ருர். "கோவலன் பண்பை ஊழ்வினை உறுத்ததேன்" என்று இறுதியிலும் வினையையே குறிப்பிடுகின்ருர்.

அடுத்த நிலையில் அவல வீரனுக வருபவன் இராவணன். அவன் "முக்கோடி வாழ்நாள் முயன்ற பெருந்தவமும்" உடையவன் சிறந்த வீரன். வீழ்ச்சிக்குக் காரணம், 'சீதையை தன் இதயமாம் சிறையில் வைத்தான்' என்பதே. அதற்குமுன் எத்தகைய தீங்கும் செய்தானில்லை. சூர்ப்பனகையால்தான் சீதையை மனச்சிறையில் வைத்தான்.

"சீதையை விடுதியாயின் தீருமித் தீங்கு"—என்று கூறியும் இராவணன் சிந்தித்தானில்லை. "பேசுவது மானம் பேணுவது காமம்" என்று கும்பகர்ணன் கூறுகின்ருன். இதையெல்லாம் இராவணன் ஏற்கவில்லை. இராவணன் செய்த தவறு காமம் மட்டுமன்று. செருக்கும் காரணம். அதாவது தன்னம்பிக்கை, படைமேற் செல்லும் இராணவன்

மனிதர்களேயும் வானரங்களேயும் எளியவர்களாகக் கருது கின்றான். தன்வலியும் மாற்றான் வலியும் உணரவில்லை. இப்பண்பு தேவையென்றாலும்கூட இராமனிடத்தில் எல்லைமீறிச் சென்ற காரணத்தால் அவன் அழிந்தான்.

இவனுடைய அவலத்தைக் கண்டு கம்பர் அழகாகப் பாடுகின்றார். "வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க ...... அம்மா!" இந்த 'அடங்க' என்ற சொல்லால் அவலம் விளக்கிக் காட்டப்படுகிறது.

தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டில் அழுகை தோன்றுதற்கு நிலையாக நான்கைக் குறிப்பிடுகின்றார். "இழிவே இழவே அசைவே வறுமையென—அழுகை நான்கே" 'பண்டைய நிலைகெட்டு வேறொருவாறாகி மயங்கு தல்' என்று பேராசிரியர் உரை கூறுகின்றார். இது தன்னிலை யில் தாழ்வடைதலாம். அவல வீரர்களுடைய வீழ்ச்சியில் ஒரு படிப்பினை இருக்கிறது. எந்த நிலையிலிருந்தாலும் காமம் என்பதை அளவோடு நிறுத்தாமல் எல்லைகடந்து விரும்புவார் களேயானால் அழிவார்கள் என்பதையே இதுகாட்டுகிறது.

கலைமகள் விழா

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக 7-10-62-ல் கலைமகள் விழா நிகழ்ந்தது அதுபோது திரு V. இராசமாணிக்கம், எம். ஏ., அவர்கள் தலைமை தாங்கிக் (கம்பன் காட்டிய இராமன்) என்ற தலைப்பின் கீழ் சொற்பொழிவாற்றினார்கள். திருமதி R. சிவானந்த வல்லியம்மையார், எம். ஏ., அவர்கள் (அவல வீரர்கள்) என்ற தலைப்பின் கீழ் சொற்பொழிவாற்றினார்கள்.

க. த. சங்கக் கல்விநிலைய விழாக்கள்

22-2-63 மாலை 4 மணியளவில் கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க்கழக 25ஆம் ஆண்டுவிழா க. த. சங்கத் தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம், பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ., எம். பி., அவர்கள் (புதிய வாழ்வு) என்ற தலைப்பிற் சிறப்புச் சொற்பெருக்காற்றினார்கள்.

6-3-63 புதன் 4 மணியளவில் உமா மகேசுவர உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவும் மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழாவும் திரு. ஈ. வே. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பேராசிரியர் வித்துவான் வி. அ. அரங்கசாமி அவர்கள் (குறளிற்பொருள்) என்னும் தலைப்பிற் சொற்பெருக் காற்றினார்கள். விழாத் தலைவர் பரிசுவழங்கி அரியதோர் சொற் பொழிவாற்றினார்கள்.

தமிழ் வாழ்க!

ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

காட்சி 4.

நடிகர்: ஆதிமந்தி, மருதி.

இடம்: சோலைவழி
காலம்: முற்பகல்

[கரிகாலன் மகளாகிய தான் யாரென்றே தெரியாமல் தன்னை வளர்த்துவரும் விறலியின் பெயர்த்தி என்றே எண்ணி வளர்ந்து வரும் ஆதிமந்தி பள்ளிக்குச் செல்லுகிருள். அப்பொழுது அவளின் ஆருயிர்த் தோழி மருதி பின்னே வருகிருள்—ஆதிமந்தி பாடிக்கொண்டே செல்லுகிருள்.]

ஆதிமந்தி :—

பாடல்

வண்ணம் நிறைந்தருள் செந்தமிழே—உனை
வாழ்த்தி வணங்குதும் பைந்தமிழே —(வண்)
எண்ணெழுத்தாகி எழில் நிறைந்தாய்—முகிழ்
பண்ணிசை நாடகமாய்ச் சிறந்தாய் —(வண்)
கண்ணிற் கருத்திற் கலந்தொளிர்வாய்—எம
தெண்ணத்தில் நின்று புலந்தருவாய் —(வண்)
விண்ணின் இருசுடர் போலாவாய்—எமக்
குண்ணும் பொருளோ டுயிர்ப்பாவாய் —(வண்)
தண்ணென் தமிழ்மொழித் தாயுனையே—இந்த
மண்ணில் வளர்ப்பதுதான் பணியே. —(வண்)

[சேய்மையிலிருந்து பாடலைக் கேட்டுக்கொண்டே வரும் மருதி ஆதிமந்தி பாடம் நெட்டுருச் செய்வதாக எண்ணி வந்துக் கொண்டே]

மருதி :—

பாதிவழி நடையிலுமா படிப்பு? நல்ல
பழக்கமடி ஆதிமந்தீ! ஆதிமந்தி!

[அருகில் வந்து]

காதுனக்குச் செவிடா? நான் பின்னே வந்து
கதறுகிறேன் திரும்பாமல் ......என்ன கையில்?

ஆதிமந்தி :—

வாதுசெய்யப் போதில்லை வாவா போவோம்
வந்திருப்பார் கணக்காயர் ....

மருதி :—

... ... பாடமெல்லாம்?

ஆதிமந்தி :—
ஓதியுள்ளேன் ஒருவாறு ....

மருதி :—
.... நான்தான் ஒன்றும்

ஆதிமந்தி :—
உனக்கென்ன கேட்டாலே அமையும் எல்லாம் (36)

அப்படியே விழுங்கி மனத்தகத்தே கட்டி
ஆசிரியர் கேட்கும்போ தவிழ்த்துக் கொட்டும்
செப்பிடுவித் தைக்காரி ....

மருதி :—
.... என்ன சொன்னுய்
சிரிக்காமல் பேசிளனைக் கிண்டல் செய்ய
எப்படிநீ கற்ருய்! இஃதொன்றை மட்டும்
எனக்குச்சொல் படிப்பதெல்லாம் பிறகா கட்டும்

ஆதிமந்தி :—
இப்படிநீ பேசஎங்குக் கற்ருயோ அவ்
விடத்தில்தான் ....

மருதி :— [வியப்பாக]
.... ஏதேது? ......

ஆதிமந்தி :— [கொஞ்சலோடு]
.... போடி

மருதி :— [கொஞ்சலோடு]
.... வாடி (37)

நாலாங் காட்சி முடிவு

காட்சி 5.

நடிகர்: கரிகால்வளவன், இரும்பிடர்த் தலையார்.
இடம்: அரண்மனை மண்டபம் காலம்: முன்னிரவு

[கரிகாலன் தாயத்தார் சூழ்ச்சியால் மறைந்து வாழ்ந்தகாலைத் தனக்குப் பல்லாற்ருனும் உதவியாய் இருந்த 'ஆதி'யைக் காதலித்துக் களவுமணம் பூண்டிருந்து பின் நாட்டை மீட்டு ஆட்சி எய்திய காலத்து உடனடியாக வடக்கு நோக்கிப் படை எடுத்தமையால் மண நிகழ்ச்சி நடைபெருது நின்றது. ஆதி அப்பொழுது கருவுற்றிருந்தாள். வடநாட்டு வெற்றிக்குப்பின் அவளைக் கரிகாலன் அழைத்துவரச் சென்ற போது தான் வைத்திருந்த இடத்திலும் பிற இடத்திலும் காணுமையின் மிகச் சோர்வுற்று வருந்தினன்—இரும்பிடர்த்தலையாரின் முயற்சியால் நாங்கூர் வேளின் மகளை மணந்து ஆட்சி செலுத்துங் கரிகாலன் அவளைப் பிரிந்த உவாநாள் தோறும் அவளுக்காகக் கண்ணீர் விட்டுக்

கலங்குவது வழக்கம். இன்றும் உவா நாள்—ஆதியின் ஓவியத்தின் முன் நின்று கலங்குகிருன்.]

கரிகாலன் :—

தீட்டாத ஓவியமே! செங்கரும்பே
செய்யாத பொற்சிலேயே! சிந்தைக் குள்ளே
பாட்டாக விளங்குகிற தமிழே! உன்னேப்
பார்க்கமுடியாத வினேசெய்தேன் பாவி
கூட்டாக வாழ்ந்திடுவோம் என்று சொன்ஞய்
குயிலேநீ எனேவிட்டுப் பறந்த தேனே?
வாட்டாமல் எரிகிறதென் நெஞ்சம்; என்னே
வஞ்சித்தாய்! வஞ்சியுனேந் தஞ்சம் என்று (38)

கொஞ்சித்தேன் குடிக்கநினேத் தேனே—செய்த
குற்றமென்ன எனேப்பிரிந்து சென்று விட்டாய்?
பஞ்சொத்த சீறடியில் இந்த நாட்டின்
பாரத்தைக் கட்டிடுவேன் என்ரு சென்ருய்?
மஞ்சத்தில் நீயிருப்பாய் மேலும் வாழ்வை
மங்காமற் செய்வாய்என் றெண்ணி எண்ணி
நெஞ்சத்தில் பிணித்திருந்தேன்—என்னே விட்டு
நெகிழ்ந்து விட்டாய் நீயிருக்கும் இடத்தைத்தேடி (39)

சென்றவர்கள் கால் தேய்ந்து போனர்—உன்னேச்
சிந்தித்து மனந்தேய்ந்து போனேன்—நீதான்
என்றுமென தாவியென எண்ணி னேனே;
இவ்வுடலேத் தனியிருத்தி ஏகிஞய் ஏன்?
கன்றுடனே பசுக்காணக் காத்தி ருந்தேன்
கானல்நீ ராஞயே? என்னே யிந்த
மன்றினிலே ஏற்றிவைத்த தெய்வ மே!நீ
மறைந்தாயே? ஐயோ!நான் வாழ்கின் றேனே? (40)

மறைந்திருந்த போதெனக்குப் புகலாஞயே
மனஉறுதி உன்னுரையால் பெற்றேன்; ஊக்கம்
குறைந்திருக்கும் போதினிலே குயில்போற் பாடிக்
கொள்ளேமகிழ் செய்தாயே என்றன் வாழ்வு
நிறைந்திருக்க நீவேண்டிச் செய்த தொண்டு
நிலஉலகம் எவ்வாறு தெரிந்து கொள்ளும்?...
இறந்திருப்பேன் அப்பொழுதே—ஐயோ!—நாட்டை
என்தலேயில் கட்டிவிட்டுச் சென்றிட்டாயே. (41)

தாயிழந்தேன் தந்தையினே இழந்தேன் அம்மான்
தனிமையினேப் போக்க துணே செய்யவில்லே
நீயிருந்தாய் நெஞ்சத்தில்—அதனு லன்றே
நேரியரின் ஆட்சி நிலேபெற்ற தந்தோ!
வாயருகே வந்தஉணே விழுந்த பாவி
வாடுகின்றேன் வனமயிலே எங்கு சென்ருய்?

கோயிலிலே வைத்துவிழா செய்துன் னை நான்
கொண்டாட எண்ணியிருந் தேனே ஐயோ! (42)

[அப்பொழுது இரும்பிடர்த்தலையார் வருகிறார். கரிகாலன் உளநிலை யறிந்து மறைந்து அவன் கூறுவதைச் செவிமடுக்கிறார்.]

மண்ணாசை மயக்கிலும் பாழ் வெற்றிஎன்ற
மனவெறியா லும்உன்னை யிழந்தேன், என்றன்
கண்ணான காரிகையே! காணமற் போய்
கடையேன் நான் ஆளுகின்றேன் ஆட்சி, உள்ளம்
புண்ணாகப் போம்படி ஏன் செய்தகன்றாய்?
பூவுலகில் நீயிருக்கும் இடஞ்சொல் லாயா?
பெண்ணாக வந்தெனக்குப் பெருமை தந்தாய்
பின்னேயான் வருந்த எனைஏன் பிரிந்தாய்? (43)

[இரும்பிடர்தலையார் வெளிப்பட்டு அப்பொழுதுதான் வந்ததுபோல அவனருகிற் சென்று]

இரும்பிடர்த்தலையார் :—

வளவாநீ வாழ்க! உனதரசு வாழ்க!

கரிகாலன் :—

வாருங்கள் மாமா!என் வணக்கம் … …

இரும்பிடர் :—

[இரக்கத்தோடு]

… … … … … … இன்னும்
உளமாற வில்லைநீ? ஒழிந்த வற்றை
உன்னுவது மன்னவருக் கழகா காது
களமேறி வென்றிகொளும் வீரன் சென்ற
காலத்தைக் கருத்தினிலே வைக்க லாமோ?
அளவாக நடந்துகொள்ள வேண்டும் … …

கரிகாலன் :—

[மிகவும் துயரோடு] … … … … … … மாமா!
ஆதிஎன்றன் உயிரோடு கலந்து விட்டாள் (44)
ஆவியுள்ள வரையவளை அகத்தி னின்றும்
அகற்றமுடியா தெனக்கு மாமா என்னைச்
சாவினின்றும் காத்தீர்கள் ஐயோ அந்தத்
தையலகத் ததற்காகக் கொண்டுவைத்தீர்
பாவியெனைப் பாராளச் செய்தீர் அந்தப்
பைந்தமிழை யானடையச் செய்தீ ரில்லை
பூவிலெனைப் புகழடையச் செய்தீர்—உள்ளம்
புகுந்தவளைப் போற்றவழி செய்தீர் இல்லை (45)
வேந்தனெனத் தெரியாத போதும் என்னை
விரும்பிமனம் போற்பேணிக் காத்தாள் மாமா!
காந்தமெனப் பற்றிமிகக் கருத்தாய்ப் போற்றிக்
கனியாகப் பாலாக உதவினாளே
பூந்தடமாய்ப் பொலிந்தன்பைப் புகட்டினாளே

இரும்பிடர் :—

பொய்யில்லை எனக்கெல்லாம் தெரியும் உன்னால்
நீந்தமுடியாத துயர்க்கடல் தான் ; ஆனால்
நிலையின்றி மூழ்குவது சரியா சொல்க? (46)

கரிகாலன் :—

வடநாட்டை வென்றுவந்திங் குன்னைப் பட்ட
மகிழ்ச்சியெனச் செய்வேனென்றுரைத்தேன், என்னை
"விடமாட்டேன் வருங்காலத் தந்தை நீங்கள்
வேறிடத்தில் இருப்பதுவும் தகுமோ" என்றாள்
"கடனற்ற வேண்டாமோ" என்றேன் ஐயோ
கண்ணீராச் செங்குருதி பெருக்கினாள் என்
மடனுள்ளம் மதிக்கவில்லை ; மாமா! பெற்ற
மகவுடனே எங்குற்றாள்—மடிந்திருப்பாள் (47)

[அழுதுகொண்டே]

கொய்தமல ரானபின்பு குவலயத்தில்
குடியிருக்க ஒப்பவில்லை போலும் ; பாவி
செய்தபழி நோக்கியுளஞ் செய்திருப்பாள்
தெய்வத்தை இகழ்ந்து விட்டேன்மாமா……!

இரும்பிடர் :—

[கண்கலங்கி]

……… ……… ……… மன்னா
எய்தவினை இருக்கஉளம் நொந்தால் இங்கே
என்னபயன் விளைந்து விடும் …… ……

கரிகாலன் :—

…… …… ஐயோ! மாமா!
உய்தியெனக் குண்டோநான் என்ன செய்வேன்

இரும்பிடர் :—

உண்டுமன்னா உண்டுனது உண்மையான (48)

நன்றியுளங் கண்டுவிதி நானும்—அந்த
நங்கையினைப் பற்றியினித் தெரியும் செய்தி
இன்றளவும் நின்னுளத்தை அறியவில்லை
எப்படியும் "ஆதி" வரலாற்றை நானே
சென்றறிந்து வருகின்றேன் சிந்தைநோகேல்!
திறமாக ஆட்சியினைச் செய்வாயாக!
மன்றறியத் துன்பத்தைப் பரப்பல் மன்னன்
மாட்சிக்குக் கேடாகும் மறவேல் வாழ்க! (49)

ஐந்தாங் காட்சி முடிவு

———